**நாள் : 27.09.2023**

## அசல் வழக்கு எண்: 131/2018

வா.சா.-1 தங்கமணி முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -

நான் தாக்கல் செய்ய வழக்கிற்கான விவரங்களை நான் தான் சொன்னேன். 04.08.1997 ல் நாகப்பட்டினம் சார்பதிவாளர் பிறப்பித்த உத்தரவை ரத்துசெய்யக்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்எ ன்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதி வேறு யாருக்கும் விற்பனை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இது தவிர வேறு கோரிக்கையும் இல்லை என்றால் சரிதான்.

1996 லேயே இந்த தாவா சொத்து சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். கடந்த 37 வருடங்களாக பிரச்சனையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். கடந்த 37 வருடங்களாக தாவா சொத்து என் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதுதான் கட்சி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல வழக்குரையில் அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் தற்போது நினைவில் இல்லை.

வழக்கு சொத்து என் அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தற்போது ஞாபகமில்லை. வழக்கு சொத்து தொடர்புடைய இடத்தில் கட்டிடம் உள்ளதா அல்லது காலி மனையா என்றால் காலி மனையாக உள்ளது. தாவா சொத்திற்கு அருகில் கல்யாணமண்டம் உள்ளதாக கோரி நான் ஒரு புகைப்படத்தை காட்டினேன் என்றாலும் அது போலியாக தயாரிக்கப்பட்து என நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 36 வருடங்களாக நான் தாவா சொத்து தொடர்பாக நகராடசிக்கோ அல்லது அரசுக்கோ வரி செலுத்தியது தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் லாரி எடைபோடும் வே பிரிட்ஜ் கட்டப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து நான் நடத்திவரும் கல்யாண மண்டபத்திற்கு தென்புறத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனக்கு சொந்தமான கல்யாண மண்டபம் எந்த திசையாக உள்ளது என்றால் கிழக்கு மேற்காக உள்ளது எனது மனைவிக்கு சொந்தமானது. மேற்படி கல்யாண மண்டபத்திற்கு தென்புறத்தில் அரசுக்குசொந்தமான டாஸ்மார்க் இயங்கிவருகிறது என்று சொன்னால் அது பற்றி தெரியாது. தாவா சொத்தை நான் தினசரி பார்வையிட்டு வருகிறேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு அருகிலேயே 50 மீட்டர் இடைவெளியில் மணி மருத்து மனை உள்ளது என்றாலும், அதன் விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றாலும் சரியல்ல.

*கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தனது தரப்பு வாதியிடம் சங்கதிகளைப் பெற்று பின்னர் குறுக்கு விசாரணை யை தொடர அனுமதி கேட்கிறார் . நீதிநலன் கருதி குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.*

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

(S/d. A. Seethalakshmi)
District Munsif
Mannargudi.